**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 1, November 2022** **E-ISSN: 2583-0481**

# Neglection of Untouchability in the Songs of Nayanmar

**Dr. G. Joseph Arun Kumar,** Assistant Professor of Tamil,
St.Joseph College, of Arts and Sciences, Mettur, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-2924-0633**
**DOI: 10.5281/zenodo.7313142**

## Abstract

*Untouchability is pervasive. In this way untouchability prevailed in the period when the Nayanmars lived. So the Nayanmars strove to eradicate untouchability through their hymns. They put forward the philosophy that all are the same, removing the caste distinction. This article deals with the abolition of untouchability in such Nayanmar songs. Untouchability is considered to be the biggest deadly disease in society. Many people are trying to end such untouchability. Thus caste differences were rooted in the period of Nayanmars as well. By removing them, the Nayanmars intended to eradicate untouchability through their deeds and scriptures. Innumerable untouchability arguments in Nayanmar's thoughts, people put forward various ideas to abolish untouchability. This article examines the manner in which such Nayanmars tried to remove untouchability.*

**Keywords:** Untouchability, Relatives, Caste discrimination, Shiva.

## References

[1] Ramanathan.Aru. Sixty-Three Deformities (Periyapuranam), Prema Publications, Chennai, Second Edition, 1973.
[2] Sambandham.V. Good Ways Shown by Alwars and Nayanmars to Eliminate Caste Conflicts in Tamil Nadu, Vivekananda Kendra, Kanyakumari, December 1998.
[3] Sekizhar, Thiruthonda Puranam, Sri Namachivaya Murthy Press, Thiruvaduthurai, 1988

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நாயன்மார் பாடல்களில் தீண்டாமை ஒழிப்பு

**முனைவர் ஞா. ஜோசப் அருண்குமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-2924-0633
DOI: 10.5281/zenodo.7313142

**ஆய்வுச்சுருக்கம்**

*தீண்டாமை என்பது எல்லா இடங்களிலும் பரவி நிற்கும் ஒன்றாக இருக்கின்றது. அவ்வகையில் நாயன்மார்கள் வாழ்ந்த காலக்கட்டத்திலும் தீண்டாமை என்பது பெருமளவில் நிலவி வந்தது. எனவே நாயன்மார்கள் தம்முடைய பாசுரங்கள் வாயிலாக தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டனர். சாதி வேறுபாடினைக் களைந்து அனைவரும் ஒன்றே என்ற தத்துவத்தினையும் முன் வைத்தனர். அத்தகைய நாயன்மார் பாடல்களில் தீண்டாமை ஒழிப்பு குறித்து இக்கட்டுரை அமைகின்றது. சமூகத்தில் தீண்டாமை என்பது மிகப்பெரும் கொடிய நோயாக கோலோச்சுகிறது. அத்தகையத் தீண்டாமை ஒழிய வேண்டும் என்றும் பலரும் முனைந்து வருகின்றனர். அவ்வகையில் நாயன்மார்கள் காலக்கட்டத்திலும் சாதி வேற்றுமைகள் வேரூன்றியிருந்தது. அவற்றை அகற்றி நாயன்மார்கள் தம்முடைய செயல்கள் மூலமாகவும் பாசுரங்கள் மூலமாகவும் தீண்டாமையைக் களைய எண்ணினர். நாயன்மார்களின் எண்ணங்களில் எண்ணற்ற தீண்டாமை வாதங்கள், தீண்டாமையை ஒழிக்க பல்வேறு கருத்துக்களை மக்கள் முன் வைத்தனர். இத்தகைய நாயன்மார்கள் தீண்டாமையை அகற்ற முனைந்த விதத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** தீண்டாமை, அந்தனர்கள், ஜாதிவேறுபாடு, சிவன்.

**முன்னுரை**

தீண்டாமை என்பது எல்லா இடங்களிலும் பரவி நிற்கும் ஒன்றாக இருக்கின்றது. அவ்வகையில் நாயன்மார்கள் வாழ்ந்த காலக்கட்டத்திலும் தீண்டாமை என்பது பெருமளவில் நிலவி வந்தது. எனவே நாயன்மார்கள் தம்முடைய பாசுரங்கள் வாயிலாக தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டனர். சாதி வேறுபாடினைக் களைந்து அனைவரும் ஒன்றே என்ற தத்துவத்தினையும் முன் வைத்தனர். சமூகத்தில் தீண்டாமை என்பது மிகப்பெரும் கொடிய நோயாக கோலோச்சுகிறது. அத்தகையத் தீண்டாமை ஒழிய வேண்டும் என்றும் பலரும் முனைந்து வருகின்றனர். அவ்வகையில் நாயன்மார்கள் காலக்கட்டத்திலும் சாதி வேற்றுமைகள் வேரூன்றியிருந்தது. அவற்றை அகற்றி நாயன்மார்கள் தம்முடைய செயல்கள் மூலமாகவும் பாசுரங்கள் மூலமாகவும் தீண்டாமையைக் களைய எண்ணினர். நாயன்மார்களின் எண்ணங்களில் எண்ணற்ற தீண்டாமை வாதங்கள், தீண்டாமையை ஒழிக்க பல்வேறு

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

கருத்துக்களை மக்கள் முன் வைத்தனர். இத்தகைய நாயன்மார்கள் தீண்டாமையை அகற்ற முனைந்த விதத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**அப்பூதியடிகள் நாயனார்**

சோழநாட்டிலுள்ள திங்களூரில் அந்தணர் மரபில் தோன்றியவர் இப்பூதியடிகள். இவர் வேளாளர் குலத்தில் பிறந்த திருநாவுக்கரசரை காண்பதற்கு முன்னமே அவரது அருமை பெருமைகளைக் கேள்வியுற்று அவர் மிகுந்த அன்பு கொண்டவர். நாயன்மார்கள் வாழ்க்கையில், அன்பிற்கும் பக்திக்கும் சாதிவேறுபாடு இடையூறாக இல்லை என்பதற்கு அப்பூதியடிகள் பற்றிய பெரியபுராண பாடல் வரிகளே சிறந்த சான்று. சிவபெருமான் பிறப்பால் உயர்ந்தவர்களுக்கே தமதருளை வழங்கினர் என்பது எங்கும் இல்லை. அக்குடியில் பிறந்தாலும் அவர்கள் அன்பினால் சிறந்தவர்களாக இருந்தால், அவர்களைக் குலம், சாதிபாராது அவர்களுக்கே தமது திருவருளை வாரி வழங்கி வந்திருக்கின்றார் என்பதற்கும் பெரியபுராண பாடல்வரிகள் சான்றாக உள்ளன.

**அன்பின் வெளிப்பாடு**

அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மீது கொண்ட அன்பின் காரணமாகத் "தம் பிள்ளைகட்கும் வீட்டிலுள்ள பொருட்கட்கும் எருமைகட்கும் திருநாவுக்கரசர் பெயரைச் சூட்டி, மகிழ்ந்து அன்புடன் அழைத்து வந்தார்" (பெரிய அப்பூதிநாயர், பா.2:3-4) தாம் அமைத்திருந்த திருமடத்திற்கும் தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றிற்கும் திருநாவுக்கரசர் பெயரையே வைத்து அளவிட முடியாத அறச்செயல்களைச் செய்து வந்தார். (பெரிய அப்பூதிநாயர், பா.3) இதனால் பேரன்பு கொண்டோரில் பெயர்களைச் சாதி, மதம் பார்க்காமல் சூட்டக்கூடிய மரபு இருந்தது என்பதை பெரிய புராண வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

**அரவம் தீண்டி உயிர் பெறுதல்**

திருநாவுக்கரசருக்கு விருந்து படைக்க, அப்பூதியடிகளின் மகனான மூத்த திருநாவுக்கரசு வாழைக் குருத்து கொண்டு வர வாழைத் தோட்டத்திற்குச் சென்றான். அங்கே அரவு தீண்டவே, விட வேகத்தையும் பொருட்படுத்தாது விரைந்து சென்று வாழைக்குருத்தைத் தாயார் பால் வைத்து படிமேல் வீழ்ந்தான். அப்பூதிகளும் மாய்ந்த புதல்வனைப் பாயினுள் பெய்து மூடிப் புறங்கடையில் மறைத்து வைத்து விட்டு நாவுக்கரசருக்கு விருந்து படைக்க முடிவு செய்தார். திருநீறு பெற மூத்த திருநாவுக்கரசு ஏன் வரவில்லை என்று கேட்க, அப்பூதியடிகளோ "இப்போது இங்கு அவன் உதவான்" (பெரிய அப்பூதிநாயர், பா.3) என்றார். பின்பு மனம் நொந்து மகனுக்கு நேர்ந்ததைக் கூறியவுடன் இறந்த மூத்த திருநாவுக்கரசரின் உடலைத் திடுப்பழனம் கோயிலுக்கு முன் கொண்டு சென்று இறைவன் முன்னிலையில் ஒன்று கொலாம் (திருநாவு. தேவா – தாடநத... திருப்பூதிரம்) என்று விடந்தீர் பதிகத்தைப் பாடினார் திருநாவுக்கரசர். இறையருளால் மூத்த திருநாவுக்கரசு விடம் நீங்கி, உறங்கி அழுபவனைப் போல் உயிர்பெற்று எழுந்து, திருநாவுக்கரசரின் திருவடிகளை வணங்கினான்.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

இன்னல் ஏற்படும் போது நாயன்மார்கள், சாதிவேறுபாடு பார்க்காமல் உதவி புரிந்தனர் என்பதும், இறைவனும் சாதிவேறுபாடு பாராமல் நாயன்மார்களுக்கு அருள்புரிந்தான் என்பதும் பெரியபுராணபாடல் வரிகள் விளம்பும் கருத்தாகும்.

**மதுரகவியாழ்வார் அப்பூதியடிகள் ஒப்பீடு**

அப்பூதியடிகளைப் போலவே மதுரகவியாழ்வாரும் அந்தணர் குலத்தில் பிறந்தவர். தாழ்ந்த குலத்தில் பிறந்த நம்மாழ்வாரின் கல்வி பெருமையினையும் தவ ஒழுக்கத்தினையும் அவர் திருமால் திருவடிக்கண் வைத்த பேரன்பினையும் நோக்கி அவரைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டார். மதுரகவியாழ்வார் இறைவனைப் பற்றிப் பாடாமல் நம்மாழ்வாரைப் பற்றி பாடியுள்ளார். இதைப் போலவே அப்பூதியடிகளும் நாவுக்கரசரைத் தனது குருவாகவே ஏற்றுக் கொண்டார். இத்தன்மையை நோக்கும் போது மதுரகவியாழ்வாரும் அப்பூதியடிகளும் ஒப்பு நோக்கத் தக்கவர்கள் ஆவார்கள் என்று முனைவர் வ.சம்பந்தம் அவர்களை தமிழகத்தில் சாதிச் சண்டைகளை ஒழிக்க ஆழ்வார்களும், நாயன்மார்களும் காட்டிய நல்வழிகள் என்று நூலில் குறிப்பிட்டுள்ளார். (நல்வழி, ப.9)

**கண்ணப்ப நாயனார்**

பெரிய புராணத்தில் மூன்றாவது சருக்கமாகிய இலை மலிந்த சருக்கத்தில் கண்ணப்ப நாயனார் குறித்த பாடல்கள் இடம் பெறுகின்றன. ஏனாதிநாத நாயனாரின் வரலாற்றின் இறுதியில் கண்ணப்ப நாயனாரின் பெருமை கூறப்படுகிறது. கண்ணப்பா இறைவனுக்குத் தன்னையே காணிக்கையாக்கி மேம்பட்ட பேரறம் பேசப்படுகிறது. கண்ணப்பன் வேட்டுவகுல மன்னன் நாசனின் மைந்தன். இவரது இயற்பெயர் திண்ணன் திருப்பாளத்தி நாதருக்கு தன் கண்களை இடந்து அப்பியதால் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார். தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றிய கண்ணப்பர் பெருமை தமிழ்நாடெங்கும் பரவி நின்றது. பொன்னம்பலத்தில் நின்று ஆடும் சிவபெருமான் தனது வலப்பக்கத்தில் என்றும் நீங்காது இருக்க என்று இவருக்கு வரம் அருளினார். இதனைச் சேக்கிழார்

**பேறினி இதன்மேல் உண்டோ பிரான்திருக் கண்ணில் வந்த**
**ஊன்கண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங் கையை**
**ஏறுயர்ந் தவர்தங் கையால் பிடித்துக் கொண் "டென்வலகத்தில்**
**மாறிலாய்! நிற்க" என்று மன்னுபோ அருள்பு ரிந்தார் (பெரிய. கண்ண. புரா., பா. 185)**

என்று பெரிய புராணத்தில் கூறுகிறார். சாதிகள் மலிந்த நம் சமுதாய அமைப்பில் மனிதன் சாதி வேறுபாடுகள் பாராட்டும் போது இறைவனாகிய சிவபெருமான் தனது வலதுப்பக்கத்தில் என்றும் நீங்காது இருக்க, கண்ணப்பருக்கு அருள் செய்தது மூலம் பரம்பொருளாகிய இறைவன் கூட சாதியைப் பாராட்டவில்லை என்ற கருத்தைப் பெரிய புராண பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

**கண்ணப்பரும் காளத்தி மலையும்**

கண்ணப்பன், வேட்டுவகல மன்னன் நாகனின் மைந்தன். நாகன் 'தெபாத்தப்பி' என்ற

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

மலை நாட்டை ஆண்டு வந்தான். பொத்தப்பி நாடு இன்றைய காளஹஸ்திப் பகுதியாகும். இன்றைய தமிழ்நாட்டின் எல்லைப்பகுதியான காளத்தி மலைப்பகுதி முன்பு தமிழகத்தோடு இணைந்திருந்தது, நாகனுக்கு மூப்பு எய்தியது. அவ்வமயம், நாட்டிலுள்ள வேடர்கள் அனைவரும் வந்து, தங்களுக்கு விலங்குகளால் நேரும் தீங்குகளைக் குறித்து தலைவனிடம் முறையிட்டனர். நாகனோ, தன் மகன் திண்ணனை வேட்டைக்குச் சென்று வருமாறு ஆணையிட்டார். திண்ணனுடன் பலவேடர்களும் சென்று மிருகங்களை வேட்டையாடினர். திண்ணனும் காட்டுப்பன்றியைக் கொன்று, தீக்கடைந்து அதனை வேடவர்களுக்கு கொடுத்து விட்டு, எஞ்சியதை எடுத்துக்கொண்டு காளத்திமலை மீது உள்ள குடுமிந்தேவரை வணங்க சென்றார்.

**அன்பின் திருவுலகம்**

திண்ணன் சிவத்தைக் காணுமுன், சிவபிரானது கருணை நோக்கம் அவர்மேல் பதிந்தது. அதனால் இப்பிறப்பின் தொடர்பு நீங்கிட அவர் சிவனடிக் கீழ் ஒப்பற்ற அன்புருவம் ஆயினார். வேட்டுவராகிய திண்ணவார் காளத்தியப்பர் மீது கொண்ட வாஞ்சையாய் அவருக்குச் சூட்ட வேண்டிய மாலையைத் தன் கூந்தலிலும், அவருக்கு அபிசேகம் செய்ய நீரைத் தன் வாயிலும் வைத்துக் கொண்டு வந்தார். திருக்காளத்தியப்பர் உண்பதற்கான உணவைத் தானே கட்டு எடுத்து வாயில் வைத்துக் கொண்டு கடித்துச் சுவைத்து இலையில் எடுத்துக் கொண்டு சென்றார். காளத்தியப்பர் கழுத்தில் கிடந்த வாடிய மாலையைத் தன் கையால் எடுத்து வீசினார். தான் பிறந்த குலத்தை எண்ணாது. தன்னைத் தீண்டத் தகாதவராக வைத்துள்ள நிலையை எண்ணாது செய்தார். காளத்திநாதனை, பூசனை செய்து வரும் சிவகோசரியார் என்னும் வேகியர். கண்ணனாரின் மேற்கண்ட அரசியலீகளால் மனம் வருந்தினார். இதனை அறிந்த காளத்தியப்பர் நான் கண்களால் இரத்தம் வழியர் செய்தார். இதனைக் கண்ட கண்ணனோ தன் கண்ணையே எடுத்து அப்பி கண்ணப்பன் ஆனார்.

**திருக்காளத்திநாதர்**

கண்ணப்பனின் இழிந்த சாதியாக எண்ணாமல் கண்ணப்பனே திண்டுமாறு செய்தார். கண்ணப்பனை நாட்டில் உள்ளார். தீண்டுவதில்லை. நாட்டை வாழ்விக்கும் இறைவன் தீண்டினான். கண்ணபனின் எல்லையற்ற அன்பினைக் கண்டு வியந்த மணிவாசகர்

**கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை – கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆம் கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணைச்**
**கண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் (திருவாசகம்)**

என்று பாடி பாராட்டியுள்ளார். திருநாவுக்கரசரோ, திருக்காளத்தி சென்று கண்ணப்பரை வணங்கினார்.

**மலர்க்கண் இடந்தப்பினான் குலத்திற்**
**கிராதனங் கண்ணப்பனார் (திருத்தொண்டர் திருவந்தாதி, பா. 3,4)**

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

என்று திருத்தொண்டர் திருவந்தாதி கூறுகிறது. கண்ணப்பரின் அன்பின் பெருமையைப் பட்டினத்தார் "தொண்டு செய்து நாளாறில் கண் இடந்து அப்பல்லேன் அல்லேன்" (திருகாளத்தி பா. 3-1) என்று பாராட்டிப் போற்றியுள்ளார்.

**சோமாசிமாற நாயனார்:**

சோழவள நாட்டிலுள்ள திருவெம்பா ஊரில் பிறந்தவர் சோமாசி மாறர். இது இவரது இயற்பெயரன்று. இவர் சோமயாகம் செய்தமையால் சோமாசிமாற நாயனார் என்று அழைக்கப்பட்டார். முறையாக யாகம் செய்வதையும், திருவைநீதெமத்தை ஓதுவதையும் தனது பணியாகக் கொண்டவர். அடியர்களுக்கெல்லாம் அடியவராயிருந்து அவர்களது திருவடிகளைப் போற்றி திருவழுது படைத்தவர். சாதிப் பேதமற்ற சமுதாயம் அமைய சோமாசிமாற நாயனார் தொடர்பான பெரியபுராண பாடல்வரிகள் சான்று பகர்கின்றன.

**சிவவேள் வியும் இறைவன் தோற்றமும்**

சோமாசிமாற நாயனார் திருவென்பர் பதியில் சிவபெருமானுக்காக வேள்வி செய்து கொண்டிருந்தார். பிறப்பால் உயர்ந்த அந்தணர்கள் பாகத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். வேள்வியில் இடும் அவிச்சைப் பொருட்களை சிவபெருமான் நேரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தவமிருந்தார். சிவபெருமானோ தாழ்ந்த சாதியில் அதுவும் கீழான தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பறையன் உருவம் தாங்கி அவ்வேள்விக் குண்டத்திற்கு எழுந்தருளினார். அதைக் கண்ட அந்தணர்கள் அனைவரும் எழுந்தருளியிருப்பவன் சிவபெருமான் என்று உணராமல் அறிந்து கொள்ளாமல் "தூய வேள்விக் களத்திற்குப் பறையன் வந்தான்" என்று கூறி ஓடிப் போனார்கள். அவர்கள் சிவபெருமானை வழக்கமான திருக்கோலத்தில் எதிர்பார்த்தனர். ஆனால் அதற்கு மாறாக இறைவனோ மிகவும் தாழ்ந்த குலத்தினரான பறையன் (ஆதிதிராவிடன்) வேடத்தில் தோன்றினான். சோமாசிமாற நாயனாரும் சுந்தரமூர்த்p நாயனாரும் அறிவு தெளிந்து எழுந்தருளிய சிவபெருமானுக்கு அவிச்சைப் பொருள்களைத் தந்து பெரும்பேறு பெற்றனர். இந்நாயனார் தொடர்பான பெரியபுராண பாடல்கள் பிற்ப்பால் தாம் உயர்ந்தவர் என்று செம்மாந்து இருப்பவரைச் சிவபெருமான் வேரோடு சாய்த்தார் என்பதை இந்தச் சமுதாயத்திற்கு எடுத்து இயம்புகின்றன.

**திருஞான சம்பந்த நாயனார்**

சைவசயக்குரவர் நால்வரின் முதலில் வைத்துப் போற்றத்தக்கவர் திருஞானசம்பந்தர். அவர் இறைவனை மகன்மை (சற்புத்திர மார்க்கம்) நெறியில் நின்று வழிபட்டவர். பெரியபுராணத்தைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும் பொழுது மெய்யன்பர்கள் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்று கூறுவார்கள். இங்குப் பிள்ளை என்பது ஆளுடைய பிள்ளையாகிய திருஞானசம்பந்தரையும் புராணம் என்பது பெரியபுராணத்தையும் குறிக்கும். திருஞானசம்பந்தர் இல்லையென்றால் சைவமும் இல்லை; தமிழும் இல்லை; இவர் பல சிவத்தலங்கட்குச் சென்று சாதி வேறுபாடில்லாமல் எல்லா மக்களையும் அரவணைத்துச் சென்று சிவபெருமானைப் போற்றிப் பாடியுள்ளார் என்பது பெரியபுராண பாடல்வரிகள் பகரும் சான்றாகும்.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**திருநீலகண்ட யாழ்ப்பாணரும் திருநீலநக்க நாயனாரும்**

திருஞானசம்பந்தரின் புராணத்தோடு பின்னிப்பிணைந்த புராணம் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மற்றும் திருநீலநக்க நாயனார் புராணம் ஆகும். இம்மூவருள்ளும் தீண்டத்தகாத பாணர் வகுப்பைச் சார்ந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவி மதங்க சூளாமணி ஆவார்கள். இவரது ஊர் பெருந்நாகலத்திற்குத் தெற்கே ஏழுமைல் தொலைவில் அமைந்துள்ள திருஎருக்கந்தம் புலியூர். இது உயர்ந்த சிவத்தலம் ஆகும். சிவபெருமானது திருப்புகழை யாழிலே இட்டு வாசிப்பதே இவரது தலையாய அறச்செயலாகும். அவருடன் அவரது மனைவி மதங்க சூளாமணியும் சென்றார். தனது இசைத்திறத்தாலும் யாழின் இனிமையாலும் பக்தியாலும் அனைவரையும் மகிழ்வூட்டினாலும் திருநீலகண்ட யாழ்ப்பானனின் தனது சமூகத்தால் தாழ்ந்தவர்; தீண்டத்தகாதவர். சமுதாய சமயத்துறையில் தொண்டுக்கு ஈடுபடுகின்ற பொழுது ஆண்டியவர். பெண்ணடியவர் என்றும் உயர்ந்த குலத்தோர் தாழ்ந்த குலத்தோர் என்றும் இல்லாது 'அடியவர்' என்ற நிலையிலேயே தொண்டு செய்தவர்கள் நாயன்மார்கள் என்ற கருத்துப் புலப்படுகிறது.

**சாதி பேதமற்ற பயணம்**

திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவி மதங்க சூளாமணியம்மையரும் சீர்காழி சென்று திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்கினர். சம்பந்தர் அருளிய பாசுரங்களை யாழில் இட்டு வாசித்துக் கொண்டே, அவருடன் சேர்ந்து பல சிலத்தலங்கட்கும் சென்றனர். அவ்வமயம் சம்பந்தர் யாழ்ப்பானரை 'ஐயரே' என்று அழைத்தார். இதன் மூலம் தாழ்ந்த குலத்தில் பிறந்த யாழ்ப்பாணரை உயர்வாக எண்ணி உயிர் ஒன்றிய உறவு கொண்டிருந்தார். சம்பந்தர் என்ற உண்மை புலப்படுகிறது. உயர்ந்த கலத்தில் பிறந்த திருஞானசம்பந்தர் மிகவும் தாழ்ந்த பாணர் குலத்தில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவரது மனைவியாரையும் சிவத்தலங்கட்கு உடன் அழைத்துச் செல்லுகின்ற காலங்களில் சாதி உயர்வு தாழ்வு, தீண்டாமை என்ற பிரச்சனைகள் எழவில்லை. இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற எண்ணம் தோன்றியதே தவிர 'தீண்டாமை' என்ற வண்ணத்திற்கு இடமில்லை என்ற சமத்துவம் உணரப்படுகிறது. இக்காலத்திலும் அடியார்கள் சிலர் சாதிப் பேதமின்றி கூட்டமாகச் சென்று வழிபடுவது இங்கு நினைத்துப்பார்க்கத் தக்கது.

**திருநாளைப் போவார் நாயனார்**

சோழநாட்டைச் சார்ந்த ஆதனூரில் பிறந்தவர். உழுதொழில் செய்யும் பறையர் குலத்தில் தோன்றியவர். இவரது இயற்பெயர் நந்தனார், தில்லைச் சிற்றம்பலத்தைக் காண. நான் 'நாளைப் போவேன்' 'நாளைப் போவேன்' என்று கூறிக் கொண்டிருந்ததால், இவர் திருநாளைப் போவார் என்றழைக்கப்பட்டார். இசைப்பாடி இறைவனை வழிபடுவதே இவரது தலையாய அறச்செயலாகும். தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் செல்ல தடை இருந்த போதும், சிவபெருமானின் அருளால் இறைவனடியே அடைந்த பெருமை இந்நாயனாருக்கு உரியது என்பதை பெரியபுராண பாடல்கள் பறை சாற்றுகின்றன.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**சிவன் மீது பந்தி**

இளமையிலிருந்தே இந்நாயனார் சிவபெருமானிடம் மெய்பண்பு மிகுதியாகக் கொண்டிருந்தார். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று அக்கோயில்களின் வாயிற்புறத்தே நின்று தொழுது வணங்கி சிவன் மீது வைத்துள்ள பக்தி பரவசத்தால் ஆனந்தக் கூத்தாடியும் பாடியும் மகிழ்ந்தும் வந்தார். நந்தனாரின் சிந்தனை பொன்னம்பலக் கூத்தனின் மீது சென்றது. தில்லை சென்றாலும் திருக்கோயிலுள் புகுந்து, தில்லை நடராசப் பெருமானைக் காணும் பேறு தனக்கு இல்லையே என வருந்தினார். இறைவன் மீது பொங்கிப் பாயும் காதலால் 'நாளைபோவேன்', 'நாளைப்போவேன்' என்று சொல்லிக் கொண்டே நாளைக் கழித்து வந்தார். நந்தனார் 'ஆதி திராவிடர்' என்பதால் திருக்கோயிலுக்குள் நுழைய முடியாமல் வாயிலிலேயே நின்று வழிபட வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. சாதி இறைவழிபாட்டிற்கும் தடையாய் இருந்தது என்பதை அறிய முடிகிறது.

**திருவருட் காட்சியும் திருக்குளமும்**

திருப்புன்கூர் சிவபெருமானை நேராகக் கண்டு வணங்க வேண்டும் என்று நந்தனார் விரும்பினார். அருள்புரிய விரும்பிய சிவபெருமானோ தன் முன் சன்னதியை மறைத்துக் கொண்டிருந்த இடபதேவரான நந்தியைச் சற்று விலகியிருக்கச் செய்து நந்தனாருக்கும் திருவருட்காட்சி தந்தருளினார். ஆனந்தத்துடன் கீழே விழுந்து கும்பிட்டு வணங்கி எழுந்தார். தாழ்ந்த குலத்தைச் சார்ந்த நந்தனார். கீழே விழுந்து வணங்கி கும்பிட்ட நிலப்பகுதி பள்ளமாக இருந்தது. அப்பகுதியே, இன்று திருக்கோயிலின் அருகில் மிகப்பெரிய திருக்குளமாக வெட்டப்பெற்றுத் தொப்பக்குளமாமகக் காட்சியளிக்கிறது. நந்தனாருக்கு அருள்புரிய விரும்பிய சிவபெருமான் நந்தியைச் சற்று விலகியிருக்கச் செய்ததைப் போலவே நந்தனார் குறித்த பெரிய புராணச் செய்திகளும் மக்கள் மனதில் உள்ள தீண்டாமையை விலக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. நந்தனார் நினைவாக காணப்படும் தெப்பக்குளம், 'தீண்டாமை' என்ற அசுத்த நீர் வற்றி 'சமத்துவம்' என்ற அன்பின் ஊற்று பொங்குவதற்குச் சிறந்த சான்று.

**தில்லை செல்லுதலும் தீயினுள் மூழ்குதலும்**

நதந்தனார் ஆதனூரை விட்டுப் புறப்பட்டுத் தில்லை சென்று தில்லையின் திருவெல்லையை அடைந்தனர். கோயிலுக்குள் செல்லாமல் இரவு பகலாக வலம்வந்து சுற்றிக் கொண்டிருந்தார். திருக்கோயிலினுள் நுழைவதற்குத் தன்தாழ்ந்த குலப்பிறப்பு தடையாக இருக்கிறதே என மனம் வருந்தினார். இதனைச் சேக்கிழார், **'இன்னல் தரும் இழிபிறவி இதுதடை' என்றே துயில்வார் (பெரிய.திருநாளை.நாய.புரா., பா.27:1)** எனக் கூறுகிறார். நடராசப் பெருமானை எப்போது வணங்குவது? சிதம்பரத் தரிசனம் கிடைக்குமோ? என்று நினைத்து மனம் நொந்து உறங்கத் தொடங்கினார். நந்தனாரின் விருப்பம் நிறைவேற மாதொரு பாகன் **"இப்பிறவி ஒழிய நீ நெருப்பில் மூழ்கி வேதியர்களுடன் அணைவார்" (பெரிய. திருநாளை. நாய். புரா., பா.28)** என அவருக்கு கனவில் தோன்றி கூறியருளினார். தில்லை வாழந்தணர்களின் கனவிலும் தோன்றி நந்தனார் நிலையை அவர்கட்கு விளக்கிக் கூறி, எரி

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

அமைக்குமாறு பணிந்தருளினார். அவர்களும் கூடியிருந்து தீ வளர்த்துத் தந்தனர். தீயினுள் மூழ்கி, அதன்பின் தவமுனிவராய் பூணூலும் சடைமுடியும் பொலிய சிவஒளியுடன் தீயினின்று எழுந்தருளினார். இதனைச் சேக்கிழார்,

**கைதொழுது, நடமாடுங் கழலுன்னி அழல்புக்கார்**
**எய்திஅப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்**
**பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்**
**மெய்திகழ்வெண் நூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்**
**(பெரிய.திருநாளை.நாய.புரா., பா.32)**

என பக்திமைப் பிறக்கக் கூறுகின்றார். அமரர்கள் பூமாரி பொழிய, தில்லை வாழ்ந்தணர்கள் உடன்வர நந்தனார் அம்பலவாணன் திருவடியில் கலந்து இன்புற்றார் என்று பெரியபுராணம் கூறுகிறது. மிகவும் தாழ்ந்த குலத்தவரான நந்தனாருக்காக உயர் குலத்தைச் சேர்ந்த தில்லை வாழந்தணர்கள் செய்த பணி பாராட்டிற்குரியது. தீயில் மூழ்கி நந்தனர் புனிதமடைந்ததைப் போலவே, தீண்டாமை நீங்கி இந்தச் சமுதாயமும் மறுமலர்ச்சி அடைய வேண்டும் என்பதாலேயே பெரியபுராணத்தில் நந்தனாரின் பெருமை உணர்த்தப்படுகிறது.

**முடிவுரை**

தெய்வ மணங்கமழும் தமிழகத்தில் நாயன்மார்களின் தீண்டாமை ஒழிப்புப் பற்றியச் செய்திகள் பெரிய புராண பாடல்களைச் சான்றாகக் கொண்டு இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. நாயன்மார்கள் தீண்டாமையை ஒழிக்க தாங்கள் வாழ்ந்து காட்டியதோடு அல்லாமல் நமக்கும் நல்ல வழியைக் காட்டியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] இராமநாதன்.அரு, அறுபத்து மூவர் சிதைகள் (பெரியபுராணம்), பிரேமா பிரசுரம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1973.

[2] சம்பந்தம்.வ., தமிழகத்தில் சாதிச் சண்டைகளை ஒழிக்க ஆழ்வார்களும் நாயன்மார்களும் காட்டிய நல்வழிகள், விவேகானந்த கேந்திரம், கன்னியாகுமரி, டிசம்பர் 1998.

[3] சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி அச்சகம், திருவாடுதுறை, 1988.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

 இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.